www.Padasalai.Net www.TrbTnpsc.com

ASS

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு - 2025

8 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் :100

### பகுதி - I

I) சரியான விடையைத் தேர்வு செய்க. 10 × 1 = 10

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________.
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

2. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ______ விருது வழங்கியது.
அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன்

3. மனிதர்கள் தம் _______ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.
அ. ஐந்திணைகளை ஆ. அறுசுவைகளை இ. நாற்றிசைகளை ஈ. ஐம்பொறிகளை

4. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு _____.
அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

5. அசை _____ வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

6. இன்றைய கல்வி _____ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

7. குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
அ) குணங்கள்எல்லாம் ஆ) குணமெல்லாம் இ) குணங்களில்லாம் ஈ) குணங்களெல்லாம்

8. கற்றவருக்கு அழகு தருவது ________. அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

9. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது _____ நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

10. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற

II) கோடிட்ட இடங்களை நிரப்புக – 5 × 1 = 5

11. கடைச் சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ______ என அழைக்கப்பட்டன.
12. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் _____
13. விகாரப் புணர்ச்சி _____ வகைப்படும்.
14. பின்னலாடை நகரமாக _____ விளங்குகிறது.
15. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.

III) பொருத்துக :– 4 × 1 = 4

16. விளித்தொடர் – பெரிய புராணம்
17. இயற்கைஅன்பு – அகவல் ஓசை
18. மையல் – கண்ணா வா!
19. ஆசிரியப்பா – விருப்பம்

### பகுதி – II

IV) அடிபிறழாமல் எழுதுக:– 3 + 2 = 5

20. அ) " வாழ்க நிரந்தரம்!" எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை அடி மாறாமல் எழுதுக.
(அல்லது) ஆ) "ஒன்றேகுலம்" எனத் தொடங்கும் திருமூலர் பாடலை அடி மாறாமல் எழுதுக.

21. " சொல்லுக " எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பகுதி – III

V) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 × 2 = 10

22. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
23. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
24. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?
25. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
26. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
27. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
28. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?
29. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

VI) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 × 2 = 8

30. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
31. தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
32. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?
33. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக. முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

34. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக
அ. இடி ____________ மழை வந்தது ( உடைய / உடன் )
ஆ. தமிழைக் ______________ சுவையான மொழியுண்டோ ( காட்டிலும் / விட )
35. தமிழ் எண்களை எழுதுக. அ. உலக ஈர நில நாள் பிப்ரவரி 2 _____
ஆ. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6. _____


VII) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :- 3 × 3 = 9
36. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.
37. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னியப்பரவை நூல் கூறுவன யாவை?
38. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
39. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?
40. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
41. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக

## பகுதி – IV

VIII) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 × 5 = 25
42. அ) இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்? ( அல்லது ) ஆ) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
43. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக (அல்லது) ஆ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
44. பின்வரும் மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) கொடிகட்டிப்பறத்தல் | – | நீண்டகாலமாக இருப்பது. |
| ஆ) அவசரக்குடுக்கை | – | விரைந்து வெளியேறுதல் |
| இ) கானல்நீர் | – | எண்ணிச்செயல்படாமை |
| ஈ) ஆயிரங்காலத்துப்பயிர் | – | இருப்பதுபோல் தோன்றும் ; ஆனால் இருக்காது. |
| உ) கம்பிநீட்டுதல் | – | புகழ்பெற்றுவிளங்குதல் |

45. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.
1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
3. வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.
4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது
46. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகின்றன?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

## பகுதி –V

IX) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 × 8 = 24
47. அ) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுவணிகம் குறித்து எழுதுக. ( அல்லது )
ஆ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.
48. அ) ' வெட்டுக்கிளியும் சருகுமானும் ' கதையைச் சுருக்கி எழுதுக. ( அல்லது )
ஆ) பால்மனம் கதையில் குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.
49. அ) முன்னுரை – கைத்தொழில் – வகைகள் – பயன்பாடு – பாதுகாத்தல் – முடிவுரை இக்குறிப்புகளைக் கொண்டு "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்" தலைப்பில் ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. ( அல்லது ) ஆ) முன்னுரை – நோய்வரக் காரணங்கள் – நோய்தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை. குறிப்புகளைக் கொண்டு " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com